**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு. மா.சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் பங்குனித் திங்கள் 19ம் நாள்

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02–ம் நாள் வியாழக்கிழமை

*******

**அசல் வழக்கு எண். 74/2018**

**CNR.No.TNMY07–000094–2018**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி டி.மு.இலாக்கா, சீர்காழி தாலுக்கா, அல்லிவிளாகம், 478.மாரியம்மன் கோயில் தெரு முகவரியில் வசிக்கும் கஞ்சமலை குமாரர், 59 வயதுள்ள, கருணாகரன்.

**...வாதி**

**...எதிர்...**

1. சீர்காழி டி.மு.இலாக்கா, சீர்காழி தாலுக்கா, அல்லிவிளாகம், மாரியம்மன் கோயில் தெரு முகவரியில் வசிக்கும் முருகேசன் குமாரர், 59 வயதுள்ள, சண்முகம்.

2. சீர்காழி டி.மு.இலாக்கா, சீர்காழி தாலுக்கா, அல்லிவிளாகம், மாரியம்மன் கோயில் தெரு முகவரியில் வசிக்கும் முருகேசன் குமாரர், 55 வயதுள்ள, திருஞானம். **...பிரதிவாதிகள்**

தாவா சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவிப்பதை பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ அல்லது அவரது ஏஜெண்டோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இவ்வழக்கு தாக்கலான நாள் | 16.03.2018 |
| இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 16.03.2018 |
| இவ்வழக்கின் வழக்கு மூலம் ஏற்பட்ட நாட்கள் மற்றும் இடம் | 2018ம் வருடம் பிப்ரவரி மாதத்திலும், 12.03.2018 தேதியிலும் சீர்காழி தாலுக்கா, 80.ராதாநல்லூர் கிராமத்தில் வழக்கு மூலம் |

| | |
|---|---|
| | எழுந்துள்ளது. |
| இவ்வழக்கின் பொருமானம் மற்றும் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | தாவா சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ அவரது ஏஜெண்டோ எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என்ற நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் பெற வாதியின் பொருமானம் ரூ.1,000/- என நிர்ணயம் செய்யப்பட்டு அதற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.30/- நீ.ம.க.ச பிரிவு 27(c)ன் படி செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 27.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. B. ரெங்கராஜூ அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

## தீர்ப்பாணை

1. இவ்வழக்கானது அனுமதிக்கப்படுகிறது.

2. தாவா சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவிப்பதை பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ அல்லது அவரது ஏஜெண்டோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு ஆதரவாக வழங்கி தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

3. தரப்பினர்களின் உறவுமுறையை கருத்தில் கொண்டு செலவுத்தொகை இல்லை.

## சொத்து விபரம்

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை ரிஜிஸ்டிரேஷன் டிஸ்டிரிக்ட், செம்பனார்கோயில் சப்-ரிஜிஸ்டாரை சேர்ந்த, சீர்காழி தாலுக்கா, 80 (ப.எண்.69). ராதாநல்லூர் வருவாய் கிராமத்தில்

புல எண் 72/2ல் ஹெ.0.32.0 ஏர்ஸ் (80 செண்ட்) புஞ்சை மற்றும் அதில் உள்ள சவுக்கை மரத் தோப்பு உட்பட

**நான்கெல்லைகள்:**

காசிநாதன் புஞ்சைக்கு கிழக்கு,

காசிநாதன் புஞ்சைக்கு மேற்கு,

வாய்க்காலுக்கு வடக்கு,

முன்பு சரஸ்வதி, தற்பொழுது பிரதிவாதிகள் மற்றும் வகையறா புஞ்சைக்கு தெற்கு இதற்குட்பட்டது.

**வாதி, பிரதிவாதிகள் தரப்பில் செலவுத்தொகை பட்டியல் விபரம் தாக்கல் செய்யப்படவில்லை.**

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02ம் நாள் என் கையொப்பம் இந்நீதிமன்ற முத்திரையுடன் இடப்பட்டது.

(ஒம்/- மா. சந்திரமோகன்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சீர்காழி.**

**<u>தீர்ப்பாணை</u>**

அசல் வழக்கு எண்.74/2018

நாள்.02.04.2026.